JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **7/2021** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | ஜெகன் | Village | பனிக்கம்பாளையம் |
| Father's Name | அருணாச்சலம் | Taluk | பெருந்துறை |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு இன்பிரா டெக்ஸ் கம்பெனியில் மெக்கானிக் ஆக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 10.09.2019 ம் தேதி மாலை நேரத்தில் விபத்து ஏற்பட்ட இடமான செட்டித்தோப்பு பேருந்து நிறுத்தத்திற்கு நானும், நவீனும் சென்ற போது விபத்து வழக்கு சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக நவீனும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** **நானும் , அ.சா.2 ம் நண்பர்கள் என்றால் சரிதான். சாட்சி போட வேண்டும் என்று ஜெகநாதன் கேட்டுக் கொண்டாரா என்றால் இல்லை. அ.சா.2 ன் தகப்பனார் இறந்த விவரம் கேள்விப்பட்டு நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் ஆமாம். அங்கு போலீசார் என்னை விசாரித்து பெயர் விலாசத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 என்ன எழுதியுள்ளது என்று முழு விவரம் சொல்ல முடியாது என்றால் சரிதான். பின்னிட்டு தயாரித்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக காட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை